மவ்லவி முஹம்மது யூசுப் S.P.

இஸ்லாமிய திருமணம்



SAJIDA BOOK CENTRE
CHENNAI

இஸ்லாமிய திருமணம்

மவ்லவி முஹம்மது யூசுப் S.P.

சாஜிதா புக் சென்டர்
248, தம்புச் செட்டித் தெரு,
முதல்மாடி, சென்னை - 1
போன் : 044 - 2522 4821

புத்தக விபரத் தொகுப்பு

நூலின் பெயர் : இஸ்லாமிய திருமணம்

ஆசிரியர் : மவ்லவி முஹம்மது யூசுப் S.P.

மொழி : தமிழ்

பதிப்புரிமை : சாஜிதா புக் சென்டர்

பிரதிகள் : 3000

நூலின் அளவு : 1/8 கிரவுன்

பக்கங்கள் : 40

அச்சிட்டோர் : இர்பான் பிரிண்டிங் ஏஜென்ஸி
சென்னை - 1.
போன்: 99411 75303

வெளியீடு
சாஜிதா புக் சென்டர்
248, தம்புச் செட்டி தெரு, முதல்மாடி
சென்னை - 600 001.
போன் : (044) 2522 4821 / 98409 77758
Email : shajithabookcentre@yahoo.com
web : shajithabookcentre.blogspot.in

விலை: ரூ. 20.00

பதிப்புரை

மனிதன் பிறந்தது முதல் இறப்பது வரை செய்யும் எல்லா காரியங்களுக்கும் இஸ்லாம் சரியான வழியினை காட்டி யுள்ளது. அந்த வழியை - சட்டங்களை மக்களுக்கு போதிக்க தூதர்களையும் அனுப்பியது. இப்படி வல்ல இறைவனால் அனுப்பப்பட்ட தூதர்களின் இறுதி தூதரான முஹம்மது நபி (ஸல்) அவர்கள் உண்பது எப்படி? உறங்குவது எப்படி? கொடுக்கல் -வாங்கலில் நடந்து கொள்வது எப்படி? என அனைத்து செயல்களுக்கும் வழிகாட்டினார்கள். அந்த வகையில் திருமணத்தின் போது எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் கூறி சென்றுள்ளார்கள். ஆனால் இன்றைக்கு திருமணம் என்றாலே தேவையற்ற சடங்குகளும், அளவுக்கதிகமான ஆடம்பரமும் என ஆகி மக்களுக்கு பெரும் சுமையாகிவிட்டது. எனவே நபிவழி அமல்களில் ஒன்றான இஸ்லாமிய திருமணம் எப்படி நடைபெற வேண்டும் என்ற நல்ல நோக்கில் இந்நூலை வெளியிடுகிறோம். நோக்கம் நிறைவேற வல்ல அல்லாஹ் துணை புரிவானாக!

தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நிகழ்ச்சிகளில் இந்நூலை அதிகம் வாங்கி விநியோகம் செய்யுமாறு வாசகர்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இஸ்லாமிய திருமணம்

எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்களித்த அருட் கொடைகளில் இல்லற வாழ்வும் ஒன்றாகும். இஸ்லாத்தில் துறவறத்திற்கு இடமில்லை. இஸ்லாம் இல்லற வாழ்க்கையினை கடமையாக்கி நபி (ஸல்) அவர்கள் மூலம் அதன் வழிமுறைகளையும் சீரிய முறையில் நமக்கு வரையறுத்து வழிகாட்டியுள்ளது.

உங்களில் வாழ்க்கைத் துணையின்றி இருப்பவர் களுக்கும், மேலும் உங்களுடைய ஆண்-பெண் அடிமைகளில் நல்லவர்களுக்கும் திருமணம் செய்து வையுங்கள். அவர்கள் வறியவர்களாயிருந்தால் அல்லாஹ் தன்னுடைய அருளால் அவர்களை செல்வந்தர்களாக்குவான். அல்லாஹ் மிகவும் விசாலமானவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கின்றான்.

(அல்குர்ஆன் - 24:32)

நபி (ஸல்) அவர்களுடைய துணைவியரின் வீடுகளுக்கு மூன்று பேர் கொண்ட குழுவினர் வந்து நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகள் குறித்து வினா தொடுத்தனர். அதுபற்றி அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டபோது, அவர்கள் நபி (ஸல்) அவர்களின் வணக்க வழிபாடுகளைக் குறைத்து மதிப்பிட்டது போல் தெரிந்தது. பிறகு (அவர்களே அதற்குச் சமாதானமும் கூறிக் கொண்டு), “முன்பின் தவறுகள் மன்னிக்கப்பட்டுவிட்ட நபி (ஸல்) அவர்கள் எங்கே? நாம் எங்கே?” என்று சொல்லிக் கொண்டனர். அவர்களில் ஒருவர், “(இனிமேல்) நான் என்ன செய்யப் போகிறேன் என்றால், எப்போதும் இரவில் தொழுது கொண்டே இருக்கப் போகிறேன்” என்றார். இன்னொருவர், “நான் ஒருநாள் கூட விடாமல் காலமெல்லாம் நோன்பு நோற்கப் போகிறேன்” என்று கூறினார். மூன்றாம் நபர், “நான் பெண்களைவிட்டும் ஒதுங்கியிருக்கப் போகிறேன். ஒருபோதும் மணமுடித்துக் கொள்ளமாட்டேன்” என்று கூறினார். அப்போது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், (அந்தத்

தோழர்களிடம்) வந்து, “இப்படி இப்படியெல்லாம் பேசிக் கொண்டது நீங்கள்தாமே! அறிந்துக் கொள்ளுங்கள்: அல்லாஹ்வின் மீது ஆணையாக! உங்களைவிட அதிகமாக நான் அல்லாஹ்வை பயந்துநடப்பவன் ஆவேன். ஆயினும், நான் நோன்பு நோற்கவும் செய்கிறேன். விட்டுவிடவும் செய்கிறேன்; தொழுகவும் செய்கிறேன், உறங்கவும் செய்கிறேன்; மேலும், நான் பெண்களை மண முடித்தும் உள்ளேன். ஆகவே, என் வழிமுறையை யார் கை விடுகின்றாரோ அவர் என்னைச் சார்ந்தவர் அல்லர்” என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரழி)
நூல் : புகாரி (5063)

மேற்கண்ட திருமறை - நபிமொழி மூலம் முஸ்லிம்களுக்கு திருமணம் எவ்வளவு அவசியமானது என்பதை புரிந்து கொள்ளலாம்.

திருமணத்தின் அவசியம்

திருமணத்தின் அவசியம் - நோக்கம் பற்றி இஸ்லாம் கீழ்க்காணும் காரணங்களை குறிப்பிடுகிறது. அவை திருமணத்தின் மூலம் சந்ததிகளை பெருக்குவது, மன அமைதி பெறுவது, தகாத செயல்களில் இருந்து தமது கற்பை பேணி காத்துக் கொள்வது போன்றவை முக்கிய நோக்கமாகும் என்பதை கீழ்க்கண்ட குர்ஆன் - நபிமொழிகள் மூலம் அறியலாம்.

மனிதர்களே! உங்களை ஓர் ஆத்மாவிலிருந்து படைத்த உங்களின் இறைவனுக்கு நீங்கள் அஞ்சுங்கள். மேலும், அதே ஆன்மாவிலிருந்து அதனுடைய துணையை அவன் உண்டாக்கினான். மேலும், அவை இரண்டின் மூலம் (உலகில்) அதிகமான ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான். மேலும், எந்த அல்லாஹ்வின் பெயரைக் கூறி நீங்கள் ஒருவர்

மற்றவரிடம் (உரிமைகளைக்) கோருகின்றீர்களோ, அந்த அல்லாஹ்வுக்கே நீங்கள் அஞ்சுங்கள்! மேலும், இரத்தபந்த உறவுகளை சீர்குலைப்பதிலிருந்து நீங்கள் விலகி வாழுங்கள்! திண்ணமாக அறிந்து கொள்ளுங்கள்: அல்லாஹ் உங்களைக் கண்காணித்துக் கொண்டிருக்கின்றான். (அல்குர்ஆன் - 4 : 1)

மேலும், அவனுடைய சான்றுகளில் இதுவும் ஒன்றாகும். அவன் உங்களுக்காக உங்கள் இனத்திலிருந்தே மனைவியரைப் படைத்தான். நீங்கள் அவர்களிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காக! மேலும், உங்களிடையே அன்பையும், கருணை யையும் தோற்றுவித்தான். திண்ணமாக, சிந்திக்கும் மக்களுக்கு இதில் நிறையச் சான்றுகள் உள்ளன. (அல்குர்ஆன் - 30:21)

நானும் அல்கமா மற்றும்அஸ்வத் (ரஹ்) ஆகியோரும் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரழி) அவர்களிடம் சென்றோம். அப்போது அப்துல்லாஹ் (ரழி) அவர்கள் (பின்வருமாறு) சொன் னார்கள் : நாங்கள் (வசதி வாய்ப்பு) ஏதுமில்லாத இளைஞர்களாக நபி (ஸல்) அவர்களுடன் இருந்தோம். அப்போது நபி (ஸல்) அவர்கள் எங்களிடம், “இளைஞர்களே! தாம்பத்தியம் நடத்த சக்தி பெற்றோர் திருமணம் செய்து கொள்ளட்டும். ஏனெனில், அது (தகாத) பார்வையைக் கட்டுப்படுத்தும்; கற்பைக் காக்கும். (அதற்கு) இயலாதோர் நோன்பு நோற்றுக் கொள்ளட்டும்! ஏனெனில், நோன்பு (ஆசையைக்) கட்டுப்படுத்தக்கூடியதாகும்” என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : அப்துர் ரஹ்மான் பின் யஸீத் (ரஹ்)

நூல் : புகாரி (5066)

திருமணத்தின் குறிக்கோள்

திருமணத்தில் இணையும் ஆணும், பெண்ணும் ஒருவருக் கொருவர் தங்களது இயற்கையான உடல் தாகங்களை (அனுமதிக்கப்பட்ட முறையில்) செம்மையாக பகிர்ந்து கொள்வது

இஸ்லாமிய திருமணத்தின் முக்கிய குறிக்கோளாகும் என நபி (ஸல்) அவர்கள் உணர்த்தினார்கள்.

பசிக்கு உணவு, தாகத்திற்கு நீர், உடல் இச்சையை தீர்க்க மற்றொரு துணை தேவை என்பது இயற்கையின் நீதியாகும். மோகத்தை அடக்கி மோட்சமடையலாமென வாதிடுவோர், அவர்களது பெற்றோர் அப்படிப்பட்ட நிலையை எடுத்திருந்தால் இவர் பிறந்தி ருப்பாரா? என்பதை சிந்திக்க மறந்து விடுகிறார்கள். இஸ்லாம், மோகத்தை நியாயமான (திருமண) வழியில் தீர்த்து அத்துடனே மோட்சத்தை அடைய முடியும் என்பதை கூறும் மார்க்கமாகும். நியாயமான வழியில் தீர்க்காமல் மிருகங்களைப் போல தாறுமாறாக வாழ்வதால் இன்று எய்ட்ஸ் போன்ற கொடிய நோய்கள் உருவாகியுள்ளதை அறியலாம். இன்று எல்லோரும் உங்கள் துணைவர் துணைவியர்களிடம் உண்மையாளர்களாக இருங்கள் (Be Faithful to your Spouse) கோஷம் எழுப்புகிறார்கள். ஆனால் 1400 வருடங்களுக்கு முன்பே திருமணத்தின் குறிக்கோளாக இஸ்லாம் இதனை வகுத்துள்ளது.

மணமக்களை தேர்ந்தெடுப்பது

இன்று மணமகனையோ - மணமகளையோ தேர்ந்தெடுக்கும் போது அவர்களது குடும்ப பின்னணி - வசதி வாய்ப்பு - உடல் அழகு போன்ற அடிப்படையில் தேர்வு நடைபெறுகிறது. இச்செயல் கூடாது என நபி (ஸல்) அவர்கள் எச்சரிக்கை செய்துள் ளார்கள். மணமகன் அல்லது மணமகளை தேர்வு செய்யும்போது அவர்கள் ஒழுக்க முடையவர்களாகவும் - குணத்தில் - மார்க்கப்பற்றில் நல்ல நிலையில் உள்ளவர்களாகவும் இருப்பவர்களையே தேர்வு செய்ய வேண்டும்.

“நான்கு நோக்கங்களுக்காக ஒரு பெண் மண முடிக்கப் படுகிறாள்.

1. அவளது செல்வத்திற்காக.

2. அவளது குடும்பப் பாரம்பரியத்திற்காக.

3. அவளது அழகிற்காக.

4. அவளது மார்க்க (நல்லொழுக்க)த்திற்காக. ஆகவே, மார்க்க (நல்லொழுக்க)ம் உடையவளை (மணந்து) வெற்றி அடைந்து கொள்! (இல்லையேல்) உன்னிரு கரங்களும் மண்ணாகட்டும்!" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல்கள் : புகாரி (5090)

மணமகளை தேர்ந்தெடுக்கும் முறையினை இங்கு நபிகள் நாயகம் குறிப்பிட்டு இருந்தாலும் மணமகள் மணமகனை தேர்ந்தெடுக்கும் போதும் இதே அளவுகோலையே பின்பற்ற வேண்டும்

மணமகளை நேரில் பார்த்து மணம் முடிப்பது

நான் ஒரு பெண்ணை மணமுடித்துக்கொள்ள பேசியிருந்தேன். இதனை அறிந்த நபி (ஸல்), நீர் அப்பெண்ணைப் பார்த்துக் கொள்ளும். ஏனெனில் அது உங்களிருவருக்கிடையில் உவப்பையும், நட்பையும், இணக்கத்தையும் ஏற்படுத்தக்கூடும் என்று அறிவுரைப் பகர்ந்தார்கள்.

அறிவிப்பாளர் : முகீரா (ரழி)

நூல்கள் : நஸயீ, திர்மிதீ

ஒரு நபித்தோழர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து தான் ஒரு மதீனத்து (அன்சார்) பெண்ணை மணமுடிக்க நிச்சயித்திருப்பதாகக் கூறினார். நபி (ஸல்) அவர்கள் நீர் அப்பெண்ணை நேரில் கண்டீரா? எனக் கேட்டார்கள். அதற்கு நபித்தோழர் இல்லை என்றார். நபி

(ஸல்) அவர்கள் நீர் சென்று பார்த்துக் கொள்வீராக! (பின் விவகாரமாகக் கூடாது) எனக் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல் : முஸ்லிம்

'ஒருவர் ஒரு பெண்ணை மணம் முடிக்க பேசிக் கொண்டிருக்கையில் மற்றொருவர் அப்பெண்ணை மணமுடிக்க (நிச்சயம்) பேசக்கூடாது' என நபி (ஸல்) அவர்களை வலியுறுத்தினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

நபி (ஸல்) அவர்கள் மணமுடித்த ஒரே கன்னிப் பெண்ணான ஆயிஷா (ரழி) அவர்களை அல்லாஹ் கனவில் இருமுறைக் காட்டி உங்களது மனைவியென பிரகடனப்படுத்தினான்.

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரழி)

நூல் : புகாரி

நபி (ஸல்) அவர்கள் தங்கள் வாழ்வில் மணமுடித்த அனைத்து மனைவிகளையும் நேரில் பார்த்து அவர்களது முழு சம்மதத்துடனே மணமுடித்தார்கள் என்பது ஆதாரப்பூர்வமான செய்தியாகும்.

நபி (ஸல்) அவர்களின் அருமை மகள் பாத்திமா (ரழி) அவர்களை நேரில் கண்டு பின் நபி (ஸல்) அவர்களிடம் தனக்கு ஃபாத்திமா (ரழி) அவர்களை மணம் முடித்து தரும்படி அலீ (ரழி) அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அதனை ஏற்று நபி (ஸல்) அவர்களும் மணம் முடித்து வைத்தார்கள். (நூல் : இப்னு ஸஃது)

அந்த அடிப்படையில் நபி (ஸல்) அவர்களின் இந்த வழிகாட்டலை அனைவரும் பேண வேண்டும்.

ஏனெனில் ஒவ்வொருவரும் தமக்கு வர இருக்கும் வாழ்க்கைத் துணை பற்றி பலத்த எதிர்பார்ப்புகளை வைத்திருப்பர். அதற்கேற்ற

வகையில் நடக்க வேண்டும் எனில் திருமணத்திற்கு முன்பே அனுமதிக் கப்பட்ட முறையில் நேரில் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையெனில் திருமணத்திற்கு முன்பே பார்க்காமல், தான் எதிர்பார்த்த முறையில் துணை அமையவில்லை எனும் போது அவர்களின் எதிர் காலம் பாதிக்கப்படலாம்.

திருமணம் முழுமை பெற தேவையானவைகள்

1. மணமகளுக்காக ஒரு பொறுப்பாளர் (வலீ)
2. இரு நீதமுள்ள சாட்சிகள்
3. மணமகளின் முழுமையான சம்மதம்
4. மஹர் தொகை

எந்த ஒரு பெண் தன் பொறுப்பாளர் (வலீ) அனுமதியின்றி திருமணம் செய்ய சம்மதம் தெரிவிக்கிறாளோ அத்திருமணம் செல்லாது, அத்திருமணம் செல்லாது, அத்திருமணம் செல்லாது. அப்பெண்ணுடன் உடலுறவு கொள்வதை மஹர் தொகை அனுமதிக்கிறது. எவளொருவளுக்கு வலீயில்லையோ அவளுக்கு அரசர் வலீயாவார் என்று நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பாளர்: ஆயிஷா (ரழி)

நூல்கள் : அபூதாவூத், திர்மிதீ

'ஒரு (மணப்) பெண்ணை மற்றொரு பெண் (வலீயாக இருந்து) மணம் செய்விக்கக் கூடாது. மணப்பெண் தன்னையே (வலீயின்றி) மணம் செய்தல் கூடாது' என்று நபி (ஸல்) கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல்கள் : இப்னுமாஜா, தாரகுத்னீ

மேற்கண்ட நபிமொழிப்படி ஒரு பெண் தானாக தனது திருமணத்தை நடத்திக் கொள்ள இஸ்லாம் அனுமதிக்கவில்லை.

பெண்ணின் முழுச் சம்மதத்துடன் அந்தப் பெண்ணின் பொறுப்பாளர் தான் நடத்தி வைக்க வேண்டும். பொறுப்பாளர் இல்லையெனில் அரசர் பொறுப்பாளர் ஆவார் என்பது சமுதாய தலைவர்களை அல்லது ஜமாஅத் பொறுப்பாளர் களை குறிக்கும்.

மணப்பெண்ணின் சம்மதம் தேவை

நபி (ஸல்) அவர்கள், "கன்னி கழிந்த பெண்ணை, அவளது (வெளிப்படையான) உத்தரவு பெறாமல் மணமுடித்துக் கொடுக்க வேண்டாம். கன்னிப் பெண்ணிடம் (ஏதேனும் ஒருமுறையில்) அனுமதி பெறாமல் மணமுடித்துக் கொடுக்க வேண்டாம்" என்று சொன்னார்கள். மக்கள், "அல்லாஹ்வின் தூதரே! எப்படி கன்னிப் பெண்ணின் அனுமதி(யைத் தெரிந்து கொள்வது)" என்று கேட்டார்கள். நபி (ஸல்) அவர்கள், "அவள் மௌனம் சாதிப்பதே (அவளது சம்மதம்)" என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)
நூல் : புகாரி (5136)

'இறை நம்பிக்கை கொண்டவர்களே! பெண்களை (அவர்கள் மனப் பொருத்தம் இல்லாத நிலையில்) நீங்கள் பலவந்தப்படுத்தி அனந்தரமாகக் கொள்வது உங்களுக்குக் கூடாது.'

(அல்குர்ஆன் 4:19)

'எனது தந்தை கிதாம் (ரழி) அவர்கள் எனது (முழு சம்மதமின்றி) எனக்குப் பிடிக்காத இடத்தில் திருமணம் செய்து வைத்தார்கள். நான் நபி (ஸல்) அவர்களிடம் வந்து இதனைக் கூறியபோது, அத்திருமணத்தை நபி (ஸல்) அவர்கள் ரத்து செய்தார்கள்.

அறிவிப்பாளர் : கன்சா பின்த் கிதாம் (ரழி)
நூல்கள் : அபூதாவூத், புகாரி

இதற்குப் பின் கன்சா பின்த் கிதாம் (ரழி) அவர்கள் தனது முழு சம்மதத்துடன் நபித்தோழர் அபூலுபாமா (ரழி) அவர்களை மணமுடித்ததாக அப்துர் ரஹ்மான் பின் யஜீத் (ரழி) அறிவிக்கும் ஹதீஸ் இப்னுமாஜாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதிலிருந்து மணப்பெண்ணின் சம்மதமின்றி அவளுக்குத் திருமணம் செய்து வைப்பது கூடாது என அறியமுடிகிறது. அவள் கன்னி கழிந்த பெண்ணாக இருந்தால் அவளது சம்மதத்தை வெளிப்படையாகப் பெற வேண்டும். கன்னி கழிந்தவள் முன் அனுபவம் உள்ளவளாக இருப்பதால் எதையும் வெளிப்படை யாகத் தெரிவிப்பாள் என்பதே இதற்குக் காரணம். கன்னிப் பெண்ணாக இருப்பின், தன் இசைவைத் தெரிவிக்கக் கூச்சப்படுவாள்.

எனவே, அவளிடம் திருமணத்திற்காக அனுமதி கேட்கும்போது மௌனமாக இருந்தால் கூட, அதைச் சம்மதத்திற்கு அடையாளமாக எடுத்துக் கொள்ளலாம்.

மஹர் கொடுத்து மணம் முடியுங்கள்

நீங்கள் (மணம் புரியும்) பெண்களுக்கு அவர்க ளுடைய மஹர் (திருமணக்கொடையை) மகிழ்வோடு கொடுத்துவிடுங்கள். அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனமொப்பி அவர்கள் உங்களுக்குக் கொடுத்தால் அதை தாராளமாக மகிழ்வுடன் புசியுங்கள்.

(அல்குர்ஆன் 4:4)

மணம் முடிக்கும் மணப்பெண்ணுக்குரிய (மஹர்) தொகையை முறைப்படி கொடுத்து விடுங்கள். (அல்குர்ஆன் 4:25)

மணம் முடிக்கும் பெண்ணுக்கு ஒரு பொற்குவியலையே (மஹராக) கொடுத்த போதிலும், அதிலிருந்து எதனையும் (திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள். (அல்குர்ஆன் 4:20)

நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த போது, அப்துர் ரஹ்மான் இப்னு அவ்.'.ப் (ரழி) என்ற நபித்தோழர் பேரீத்தம் பழமளவு தங்கத்தை மஹராகக் கொடுத்து ஒரு மதீனத்து பெண்ணை மணமுடித்தார்கள்.

அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

ஒரு நபித் தோழரிடம் மஹராகக் கொடுக்க எந்த பொருளும் இல்லாததை அறிந்த நபி (ஸல்) அவர்கள் உனக்கு ஏதாவது திருக்குர்ஆன் வசனங்கள் தெரியுமா? எனக் கேட்டார்கள். அந்நபித்தோழர், தனக்கு இன்னின்ன குர்ஆன் வசனங்கள் தெரியுமென விடையளித்தார்கள். உடனே அந்த வசனங்களை மணப்பெண்ணுக்கு கற்றுக் கொடுப்பாயாக! அது அப்பெண்ணுக்குரிய மஹராகும்' என்றார்கள்.

அறிவிப்பாளர் : ஸஹல் பின் ஸஅத் (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

போர் கைதியாக பிடிக்கப்பட்ட ஸ.'.பிய்யா என்ற யூதப் பெண்ணை நபி (ஸல்) அவர்கள் திருமணம் செய்து கொண்டார்கள். ஸ.'.பிய்யா (ரழி) அவர்களை போர் கைதியிலிருந்து விடுவித்தலே அவருக்கான மஹராக இருந்தது.

அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

மஹர்-திருமணக்கொடை-மணப்பெண்ணின் தனி உரிமை. அதில் தலையிடவோ, அதற்கு வரையறையிடவோ எவருக்கும் உரிமை இல்லை. ஒரு மணப்பெண் ஒரு பொற்குவியலைக் கூட தனக்கு மஹராக கேட்க உரிமையுண்டு.

ஏனெனில் இல்லற வாழ்க்கையில் அதிக இழப்பிற்கு ஆளாவது பெண்கள்தான். தங்கள் அழகு-இளமையை இழக்கிறார்கள். ஆக இஸ்லாம் வழங்கியுள்ள இந்த உரிமையினை பெண்கள் பயன்படுத்த தவறியதால் வரதட்சணை கொடுக்கும் நிலை பெண்களுக்கு ஏற்பட்டு நிலைமை தலைகீழாகிவிட்டது.

வரதட்சணையால் விளைந்திட்ட அவலங்கள்

வளர்ந்துவிட்ட இந்த வரதட்சணையெனும் கொடுமை, இன்று சமுதாயத்தில் ஏற்படுத்தியிருக்கும் சீரழிவுகளையும், அவலங்களையும் நடுநிலைக் கண்ணோட்டத்தோடு சிந்திக்கும் எந்த ஒரு மனிதனும் நிச்சயமாக இதை வெறுத்து ஒதுக்குவான்.

✦ ஆம்! இந்த வரதட்சணைக்கு அஞ்சி, எருக்கம் பாலாலும், நெல்மணியாலும் பெற்றோர்களாலே கொல்லப்பட்ட பெண் குழந்தைகள் ஏராளம்.

✦ தாம் பெற்றெடுத்த பெண்மக்களை எப்படியேனும் மணக்கோலத்தில் காண வேண்டுமென் பதற்காக தன்மானத்தைத் துறந்து ஊர்ஊராக, தெருத் தெருவாக, வீடு வீடாக, ஏன் பள்ளிவாசல் பள்ளிவாசலாக கையேந்திப் பிச்சை கேட்கும் பெற்றோர்கள் ஏராளம். ஏராளம்.

✦ வட்டிக்குக் கடன் வாங்கி, வாங்கிய கடனை பெண்ணிற்கு தட்சணையாக கொடுத்துவிட்டு, வாங்கிய கடனையும் வட்டியையும் செலுத்த முடியாமல் தற்கொலை மூலம் தன் வாழ்விற்கு முற்றுப்புள்ளி வைத்துக் கொண்ட பெற்றோர்கள் ஆயிரமாயிரம்.

✦ வயிற்றுப் பசியைத் தீர்ப்பதற்கே வழியில்லாத போது, வரனுக்கு தட்சணையை எங்கிருந்து பெற்றோர்களால் கொடுக்க முடியும்? என்று கலங்கி, இனி பெற்றோருக்கோ, உடன் பிறந்தோருக்கோ, பாரமாக இருக்கக் கூடாது என்றெண்ணி தற்கொலை மூலம் தம் வாழ்க்கைக்கு முடிவை தேடிக் கொண்ட கன்னியர்கள் ஆயிரமாயிரம்.

✦ வரன்கள் கேட்கும் தட்சணையைக் கொடுக்க முடியாததால், தம் வறுமைக்கும் வாலிப உணர்வுக்கும் வடிகாலாக விபச்சாரத்தைத் தேடிக் கொண்ட கன்னியர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காது.

✦ வாயையும், வயிறையும் கட்டிச் சேர்த்து வைத்த சொத்துக்களை வரனுக்குத் தட்சணையாக வார்த்துவிட்டு, வீடிழந்து வீதிக்கு வந்துவிட்ட குடும்பங்கள் ஆயிரமாயிரம்.

✦ வரதட்சணை எனும் கொடுமையால் இன்று சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கும் இதுபோன்ற அவலங்களும் சீரழிவுகளும் ஏராளம், ஏராளம்.

மணமகளின் பெற்றோர்களை, உடன்பிறந்தோர்களை வறுத்தி, ஏழைகளை வதைத்து, மணமகளின் குடும்பத்தின் வாழ்க்கையைச் சீர்குலைத்துப் பெறப்படும் வசதிகளே இந்த வரதட்சணை. இக்கொடுமை நாளுக்கு நாள் பல்கிப் பெருகிக் கொண்டே செல்வதைப் பார்க்கும்போது, இன்னும் என்னென்ன சீர்குலைவை எல்லாம் இது இழுத்து வருமோ என்று அஞ்ச வேண்டியிருப்பதால் வரதட்சணை எனும் கொடுமையினை தடுக்க இளைஞர்கள் அனைவரும் முன்வர வேண்டும்.

இல்லையெனில், வரதட்சணையால் ஏற்பட்ட மேற்கண்ட அவலங்களுக்கு நாளை மறுமையில் இதற்கு காரணமான அனைவரும் வல்ல அல்லாஹ்வின் முன் கண்டிப்பாக பதில் சொல்லியாக வேண்டும்.

தடுக்கப்பட்ட திருமண பந்தங்கள்

(பின்வரும் பெண்களை மணம் புரிவது) உங்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ளது: உங்கள் தாய்மார்கள், உங்கள் புதல்விகள், உங்கள் சகோதரிகள் மற்றும் உங்கள் தந்தையின் உடன்பிறந்த சகோதரிகள், உங்கள் அன்னையின் உடன்பிறந்த சகோதரிகள்; மேலும், சகோதரனின் புதல்விகள், சகோதரியின் புதல்விகள்; மேலும், உங்களுக்குப் பாலூட்டிய செவிலித் தாய்மார்கள், மேலும் உங்கள் பால்குடிச் சகோதரிகள், மேலும் உங்கள்

மனைவியரின் தாய்மார்கள், நீங்கள் உடலுறவு கொண்ட மனைவியர் (தம் முன்னாள் கணவர் மூலம்) பெற்றெடுத்து, உங்கள் மடிகளில் வளர்ந்துள்ள புதல்விகள், ஆனால் (திருமணம் ஆகி) நீங்கள் அம்மனைவியருடன் உடலுறவு கொள்ளவில்லையாயின் (அவர்களை விடுத்து, அவர்களின் புதல்விகளை மணமுடித்துக் கொள்வதில்) உங்கள் மீது எத்தகையக் குற்றமும் இல்லை. மேலும் உங்கள் முதுகுத் தண்டுகளிலிருந்து பிறந்த உங்கள் புதல்வர்களின் மனைவி யரை மணம் புரிவதும், இரு சகோதரிகளை ஒருசேர மனைவியராக்குவதும் (தடை செய்யப் பட்டுள்ளன.) ஆனால் முன்னாள் நடந்தது நடந்துவிட்டது. திண்ணமாக அல்லாஹ் மன்னிப்பு வழங்குபவனாகவும், கருணை புரிபவனாகவும் இருக்கின்றான். (அல்குர்ஆன் - 4 : 23)

இங்கு யாரை திருமணம் புரியக்கூடாது என அல்லாஹ் திருமறையில் தெளிவாகக் கூறிவிட்டான். இந்த அடிப்படையில் பெரும்பாலான முஸ்லிம்கள் சரியான முறையில் நடந்தாலும் சில இடங்களில் பிற மதத்தவர்களுடன் கலந்து வாழும் முஸ்லிம்கள் சிலர் அறியாமையின் காரணமாக உடன்பிறந்த அக்கா மகளை மணப்பது நடக்கிறது. அல்லது தனது தாயாருடன் பிறந்த சின்னம்மா (சாச்சி) மகளை, தந்தையுடன் பிறந்த சிறியதந்தை (சாச்சா) மகளை திருமணம் புரிவது தவறு எனவும் விளங்கி வைத்துள்ளனர். மேற்படி குர்ஆன் வசனத்தில் உடன்பிறந்த சகோதரியின் புதல்விகளை மணம் புரிய தடை செய்யப் பட்டுள்ளதால், உடன் பிறந்த அக்கா மகளை திருமணம் செய்யக்கூடாது. அப்படி செய்து இருந்தாலும் அந்த திருமணத்தை தொடரக் கூடாது. அதேபோல சின்னம்மா மற்றும் சிறிய தந்தையின் மகளை திருமணம் புரிய அல்லாஹ் தடை செய்யவில்லை என்பதால் இவர்களை தாராளமாக திருமணம் செய்து கொள்ளலாம் என்பதை உணர வேண்டும்.

நடைமுறையில் அவர்களை சகோதரிகள் என்று தானே கூறுகிறோம் என்று கேட்கலாம். சகோதரி என்று கூறுவது நாமாக ஏற்படுத்திக் கொண்ட நடைமுறைதான். ஒரு பெண்ணை சகோதரி என்று கூறுவதாலேயே, அவள் சகோதரி ஆகிவிட முடியாது. சகோதரி என்றால், சொத்தில் பங்கு கொடுக்க வேண்டும். அவ்வாறு யாரும் கொடுப்பதில்லை. இதிலிருந்து சகோதரி என்று அழைப்பது பெயரளவுக்குத்தான் என்பதை உணரலாம்.

சித்தப்பா, பெரியப்பா ஆகியோரின் புதல்விகள் சகோதரிகளாகி விட்டதால் மணக்கக்கூடாது என்ற வாதம் எப்படித் தவறானது என்பதை பார்ப்போம். தந்தையுடன் ஒரு ஆணும், ஒரு பெண்ணும் உடன் பிறந்துள்ளார்கள் என்று வைத்துக் கொள்வோம். நமது தந்தையைப் பொறுத்தவரை ஒருவர் அவரது சகோதரர். மற்றவர் அவரது சகோதரி. இருவரும் நமது தந்தைக்கு சமமான தகுதியில் உள்ள உறவினர்தாம்.

தந்தையுடன் பிறந்த பெண்ணுடைய மகளை மணம் முடிக்கலாம் என்றால், தந்தையுடன் பிறந்த ஆணுடைய மகளை ஏன் மணமுடிக்கக்கூடாது? என்பதைச் சிந்திக்க வேண்டும்.

இதுபோல் சின்னம்மா, மாமா ஆகிய உறவுகளுமாகும். அம்மாவுடன் பிறந்த ஆண், மாமா எனப்படுகிறார். அம்மாவுடன் பிறந்த பெண், சின்னம்மா ஆகிறாள். சின்னம்மா, மாமா என்று வார்த்தைகளில் நாம் வித்தியாசம் காட்டினாலும், நமது தாய்க்கு இருவருமே சகோதர உறவு கொண்டவர்கள்தான். மாமாவின் மகளை மணம் முடிக்கலாம் என்பதில் உள்ள எல்லா நியாயமும், சின்னம்மாவின் மகளை மணம் முடிக்கலாம் என்பதிலும் உள்ளது.

மாமியின் மகளை மணம் முடிக்கலாம் என்பதற்கான எல்லா நியாயமும், சித்தப்பாவின் மகளை மணமுடிப்பதிலும் உள்ளது.

நிக்காஹ் குத்பா

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கள் கூடும் இடங்களில் தேவை ஏற்படும் போது உரை நிகழ்த்தியுள்ளார்கள். அப்போது எல்லாம் கீழ்க்கண்ட துஆவினை ஓதியுள்ளார்கள். பொதுவாக எல்லா நேரங்களிலும் இதே துஆவை நபிகள் நாயகம் ஓதி உள்ளதால் திருமணத்தின்போது இதே குத்பாவை ஓதுவது சிறந்ததாகும்.

இன்னல் ஹம்த லில்லாஹி நஸ்தயீனுஹு வநஸ்தக்ஃ. பிருஹு வனவூது பில்லாஹி மின்ஷுருரி, அன்ஃபுஸினா, வமின் ஸய்யிஆதி அஃமாலி னாமன்யஹ்தில்லாஹு ஃபலாமுழில்லலஹு வமன்யுழ்லில் ஃபலா ஹாதியலஹு வ அஷ்ஹது அல்லாயிலாஹ இல்லல்லாஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வரஸுலுஹ் யா அய்யுஹல்லதீன ஆமனூ இத்தகுல்லாஹ் ஹக்க துகாதிஹி வலா தமூதுன்ன இல்லா வ அன்தும் முஸ்லிமூன், யா அய்யுஹல்லதீன ஆமனூ இத்தகுல்லாஹ் அல்லதீ தஸாஅலூன பிஹி வல்அர்ஹாம் இன்னல்லாஹ கான அலைக்கும் ரகீபா: யா அய்யுஹல்லதீன ஆமனூ இத்தகுல்லாஹ் வகூலூ கவ்லன், ஷதீதா யுஸ்லிஹ் லகும் அஃமாலகும் வயக்ஃபிர் லகும் துனூபகும் வமன்யுதீயில்லாஹ வரசூலஹு ஃபகத் ஃபாஸ ஃபவ்ஸன் அளீமா என்று நபி (ஸல்) கற்றுத் தந்ததாக இப்னு மஸ்வூது (ரழி) அறிவிக்கும் ஹதீஸ் திர்மிதீ, அபூதாவூதில் இடம் பெற்றுள்ளது.

குத்பாவின் பொருள் : நிச்சயமாக புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே! அவனிடமே உதவி தேடுகிறோம். அவனிடமே பாவமன்னிப்பு தேடுகிறோம். எங்கள் உள்ளங்களின் தீங்குகளை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுகிறோம். யாருக்கு அல்லாஹ் நேர்வழி காட்டினானோ அவனை வழிகெடுப்போன் யாரு மில்லை. யாரை அல்லாஹ் வழிதவறச் செய்துவிட்டானோ அவனுக்கு நேர்வழி காட்டுவோன் யாரும் இல்லை. வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாருமில்லை என்று

நான் உறுதியாக நம்புகிறேன். முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது அடியாரும் தூதருமாவார்கள் என்றும் உறுதியாக நம்புகிறேன். ஈமான் கொண்ட விசுவாசிகளே! இறைவனை முழுமையாக அஞ்சுங்கள். நீங்கள் முஸ்லிமாக அன்றி மரணிக்க வேண்டாம். (அல்குர்ஆன் 3:102) ஈமான் கொண்ட விசுவாசிகளே நீங்கள் அல்லாஹ்வுக்கு பயந்து கொள்ளுங்கள்: அவனைக் கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்: மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர் களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4:1)

ஈமான் கொண்ட விசுவாசிகளே! சொல்வதை தெளிவாகவும் தீர்க்கமாகவும் சொல்லுங்கள். அல்லாஹ் உங்கள் வணக்கங்களை சீர்செய்வான், உங்களது பாவங்களை மன்னிப்பான். யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுபட்டு நடக்கி றார்களோ நிச்சயமாக அவர்கள் மிகப்பெரிய வெற்றி பெற்றுவிட்டார்கள். (அல்குர்ஆன் 33: 70,71)

வலீமா விருந்து

திருமணத்திற்கு பின் மணமகன் சார்பாக வழங்கும் விருந்திற்கு வலீமா விருந்து எனப் படுகிறது. இந்த விருந்து நபிவழியாகும்.

நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த காலத்தில் மதீனாவில் பெரும் செல்வந்தராக இருந்த் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) என்ற நபித்தோழர் ஒரு அன்சாரி பெண்ணை மணம் முடித்தார்கள். அத்திருமணத்திற்கு நபி (ஸல்) அவர்களுக்கு அழைப்பு கொடுக்கப்படவில்லை. மறுநாள் காலை அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி) அவர்கள் தொழுகைக்கு வந்தார்கள். அவரது உடையில் மஞ்சள் நிற வாசனை பொருளின் கறை இருப்பதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள் என்ன விசேஷம்? என கேட்டார்கள். தனக்கு

முந்திய இரவு திருமணம் நடந்தது. தான் ஒரு மதீனத்து (அன்சாரிப்) பெண்ணை மணம் முடித்தேன் என பதிலளித்தார்கள். நபி (ஸல்) அவர்கள், 'எவ்வளவு மஹர் கொடுத்தாய்?' என வினவினார்கள். அதற்கு அப்துர்ரஹ்மான் இப்னு அவ்.ஃப் (ரழி), 'ஒரு பேரித்தம் பழமளவு தங்கம்!' என பதிலளித்தார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள், 'ஒரு ஆட்டையாவது அறுத்து வலீமா விருந்து வைப்பீராக!' என்றார்கள்.

அறிவிப்பாளர் : அனஸ் பின் மாலிக் (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் நபித்தோழர்கள் நபி (ஸல்) அவர்களின் அறிவுரைகளையும் உபதேசங்களையும் பெற்றார்கள். நபி (ஸல்) அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர். ஆனால் அன்று மதீனாவில் மிகப்பெரும் செல்வந்தராக திகழ்ந்த அப்துர் ரஹ்மான் இப்னு அவ்.ஃப் (ரழி) அவர்கள் தனது திருமணச் செய்தியை இறைத்தூதரிடம் கூறியபோது, உனது திருமணத்திற்கு என்னை ஏன் அழைக்கவில்லை என நபி (ஸல்) அவர்கள் கேட்கவில்லை. காரணம் பெரும் ஆடம்பரத்துடன் பலரை அழைத்து பணத்தை விரயம் செய்து திருமணத்தை நடத்துவது இஸ்லாமிய நெறி அல்ல என நபி (ஸல்) கற்று தந்திருந்தார்கள். அதன்படி சிக்கனமாக சிறப்பாக அன்று வாழ்ந்த பெரும் செல்வந்தர் அப்துர்ரஹ்மான் இப்னு அவ்.ஃப் (ரழி) தனது திருமணத்தை முடித்தார்கள். அதனை சரி கண்ட நபி (ஸல்) அவர்கள் ஒரு ஆட்டையாவது அறுத்து வலீமா (விருந்து) தர ஆணையிட்டார்கள். (ஆடம்பரமாக திருமணம் நடத்துபவர்கள் இதனை கவனிக்க வேண்டும்)

'நீங்கள் வலீமா விருந்துக்கு அழைக்கபடுவீர்களேயானால், அவ்வழைப்பை ஏற்று சிறப்பளியுங்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : முஅத்தா மாலிக்

நூல் : புகாரி

'எந்த 'வலீமா' விருந்துக்கு செல்வந்தர்கள் அழைக்கப்பட்டு, ஏழைகள் மறுக்கப்படுகிறார்களோ அந்த விருந்து உணவே உணவுகளில் மிகத் தீயதாகும். எவர் விருந்திற்கு அழைத்து அதை ஏற்க மறுக்கிறாரோ, அவர் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் மாறு செய்தவராவார்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல் : புகாரி (5177)

நபி (ஸல்) அவர்களின் திருமணங்களில் ஒரு சிலவற்றிக்கு இரு முத்துக்கள் அளவுள்ள பார்லியில் தயாரிக்கப்பட்டதை வலீமா விருந்தாக கொடுத்தார்கள். (1 முத்து - 750 கிராம் ஆகும்)

அறிவிப்பாளர் : ஸ.ஃபிய்யா பின்து ஷைபா (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

நபி (ஸல்) அவர்கள் கொடுத்த வலீமா விருந்துகளில் ஜைனப் (ரழி) அவர்களை மணமுடித்த பின் கொடுத்தது போன்ற சிறப்பானதை நான் பார்க்கவில்லை. அதற்கென நபி (ஸல்) அவர்கள் ஒரு ஆடு அறுத்து விருந்தளித்தார்கள். அந்த விருந்தில் ரொட்டியும், இறைச்சியும் வழங்கப்பட்டது.

அறிவிப்பாளர் : அனஸ்பின் மாலிக் (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

அன்பளிப்பு அல்லது மொய்

திருமணம் மற்றும் எல்லா சமயங்களிலும் உறவினர் மற்றும் நண்பர்களுக்கிடையில் அன்பளிப்பை பகிர்ந்து கொள்வது இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்டதாகும். எனவே திருமணம் செய்யும் தம்பதிகளுக்கு விரும்பும் பொருட்களை அன்பளிப்பு செய்வதில் தவறில்லை. அப்படி வரும் அன்பளிப்பு பொருட்களை பெற்றுக் கொள்வது தம்பதியினருக்கு கடமையாகும்.

"எவர் ஒருவருக்கு அவரது சகோதரர்களிடமிருந்து நல்ல பொருள் ஏதேனும் அவர் கேட்காமலும், எதிர்பார்க்காமலும (அன்பளிப்பாக) கிடைக்குமானால் அதை அவர் மறுக்காமல் ஏற்றுக் கொள்ளட்டும். ஏனெனில் அந்தப் பொருள் அல்லாஹ் அவருக்கு வழங்கிய பாக்கியமாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : காலித் பின் அதீ (ரழி)

நூல் : புகாரி

ஆக இந்த நபிமொழிப்படி அன்பளிப்புகளை மறுக்கக் கூடாது என்பதை அறிய முடிகிறது. ஆனால் இன்று திருமணங்களில் அன்பளிப்பு என்ற பெயரில் மொய் வசூலிப்பதை பார்க்கிறோம். திருமணம் நடைபெறும் இடங்களில் டேபிளை போட்டு, மொய் வசூலிப்பதையும், அதை நோட்டில் எழுதி வைத்துக் கொள் வதையும் பார்க்கலாம். மொய் எழுதியவருக்கு திரும்ப செய்ய வேண்டும் என்பதற்காகவே இப்படி நோட்டில் எழுதி வைக்கப் படுகிறது.

இப்படி ஒரு பொருளையோ அல்லது பணத்தையோ கொடுத்து விட்டு அது திரும்ப கிடைக்கும் என்ற எண்ணத்திலேயே மொய் அமைந்துள்ளது. இது அன்பளிப்பாகாது. அன்பளிப்பு என்பது திரும்பப் பெறும் எண்ணம் இல்லாமல் கொடுக்க வேண்டும். மொய் என்பது அப்படி அல்ல. எனவே அன்பளிப்பு செய்வது கூடும். மொய் கொடுப்பதும் - மொய் வாங்குவதும் கூடாது.

"தன் அன்பளிப்புப் பொருளை திரும்பப் பெற்றுக் கொள்பவன் தன் வாந்தியை தானே திரும்ப உண்பவனை போன்றவன் ஆவான்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரழி)

நூல் : புகாரி

மொய் என்ற பெயரில் போலி அன்பளிப்பாக இல்லாமல், நண்பர்கள் - உறவினர்களுக்கு அன்பளிப்பு செய்யும்போது திரும்ப

பெறும் எண்ணமில்லாமல் ஒருவர் அன்பளிப்பு செய்வதும், அந்த அன்பளிப்பை அழகிய முறையில் பெற்றுக் கொண்டு அன்பளிப்பு செய்தவருக்கு திரும்பவும் அழகிய முறையில் திரும்ப செலுத்துவதும் நபிவழியாகும்.

நபி (ஸல்) அவர்கள் அன்பளிப்பை ஏற்று அதற்கு (பதிலாக எதையாவது கொடுத்து) ஈடு செய்து வந்தார்கள்.

அறிவிப்பாளர் : ஆயிஷா (ரழி)

நூல் : புகாரி (2585)

இல்வாழ்க்கை இன்பகரமானது

அல்லாஹ் அறிவிக்கின்றான்: நீங்கள் மன நிம்மதி பெறுவதற்காக உங்களிலிருந்தே உங்கள் ஜோடிகளைப் படைத்திருப்பதும்: உங்களிடையே அன்பையும், நேசத்தையும் உண்டாக்கியிருப்பதும், அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும். சிந்தித்து உணரக்கூடிய சமூகத்திற்கு நிச்சயமாக இதில் (பற்பல) அத்தாட்சிகள் உள்ளன. (அல்குர்ஆன் 30:21)

அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கிறீர்கள். (அல்குர்ஆன் 2:187)

உங்கள் மனைவியர் உங்கள் விளை நிலங்கள் ஆவார்கள். எனவே உங்கள் விருப்பப்படி உங்கள் விளைநிலங்களை அனுபவியுங்கள். (அல்குர்ஆன் 2:223)

பெண்கள், ஆண்மக்கள், பொன்னிலும், வெள்ளி யிலுமான பொற் குவியல்கள், அடையாளமிடப்பட்ட (உயர்ந்த குதிரைகள், ஆடு, மாடு, ஒட்டகை போன்ற) கால்நடைகள், சாகுபடி நிலங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இச்சைகள் மனிதர்களுக்கு அழகாகப் பட்டுள்ளது. இவையெல்லாம் இவ்வுலக வாழ்வின் சுகப் பொருட்களாகும். அல்லாஹ்விடத்திலோ அழகான தங்குமிடமிருக்கிறது. (அல்குர்ஆன் 3:14)

'இவ்வுலகம் இன்பகரமானது, உலக இன்பங்களில் மிகவும் சிறப்பானது நல்ல (ஒழுக்கமான) மனைவியை அடைவதாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரழி)

நூல்கள் : முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்.

கணவனின் கடமைகள்

'நற்குணமுள்ளவர்கள் இறை நம்பிக்கையில் (ஈமானில்) முழுமையானவர்கள். தனது மனைவியிடம் நல்ல முறையில் நடப்பவர்கள் உண்மையில் நற்குணமுள்ளவர்கள்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல்கள் : திர்மிதீ, முஸ்னத் அஹ்மத்

மனைவிக்கு கணவன் செய்ய வேண்டிய கடமைகள் யாவை? என நபி (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அதற்கு நபி (ஸல்) அவர்கள் நீர் உண்ணும்போது அவளுக்கு உணவளிப்பதும், நீர் அணியும் போது அவளையும் அணியச் செய்வதும், அவளது முகத்தில் அறையாதிருப்பதும், அவளை (தீய சொற்களால்) இழிவு படுத்தாதிருப்பதும், வீட்டில் தவிர (வெளியிடங்களில்) அவளைக் கண்டிக்காதிருப்பதும் (கணவனின் கடமை) என்று நபி (ஸல்) அறிவுறுத்தினார்கள்.

அறிவிப்பாளர் : முஆவியா (ரழி)

நூல்கள் : அபூதாவூத், இப்னுமாஜா

'அல்லாஹ்வின் திருப்தியை நாடி நீ (உன் மனைவிக்கு) செலவு செய்த எந்த செலவுக்கும், ஏன்? உன் மனைவிக்கு அன்புடன் நீர்

ஊட்டிவிட்ட உணவுக்கும் அல்லாஹ் கூலி கொடுக்காமல் இருப்பதில்லை' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர்:ஸ.'.து இப்னு அபீவக்காஸ் (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

'ஒருவன் தனது குடும்பத்திற்காக செய்யும் அனைத்து செலவுகளும் அல்லாஹ்விடம் (நன்மைகளாக) கணக்கிடப்படுகிறது. அவை அவன் செய்யும் தான தர்மமாகிறது' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் :இப்னு மஸ்ஊத் அல்-பத்ரி (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

'ஒருவர் அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி தனது செல்வத்தை அடிமையை விடுவிப்பதற்காகவும், ஏழைகளுக்கு தர்மமாகவும், அனாதைகளுக்கு உதவி யாகவும், தனது மனைவி, மக்களை செம்மையாக வைத்திருக்கவும் செலவு செய்கிறார். இவற்றில் தனது மனைவி மக்களுக்கு செலவிட்டதே அனைத்து செயல்களிலும் மேலானதாகும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல்கள் : முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்

பெண்கள் வளைந்த எலும்பால் படைக்கப்பட்டவர்கள் அதனை நிமிர்த்த முயன்றால் அதனை உடைத்து விடுவாய் அந்த வளைவு இருக்கும் நிலையிலேயே அவளை விட்டுவிட்டால் அவளிடம் இன்பம் பெறுவாய் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

ஒரு இறைநம்பிக்கையுடைய ஆண், இறை நம்பிக்கையுடைய தன் மனைவியை வெறுத்து விட வேண்டாம். அவளது ஒரு குணத்தை

அவன் வெறுத்தால், அவன் விரும்பக்கூடிய வேறொரு குணத்தை அவளிடம் அவன் காணலாம் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல்கள் : முஸ்லிம், முஸ்னத் அஹ்மத்

பெண்களை நல்லமுறையில் நடத்துங்கள், அவர்கள் உங்களிடம் அடைக்கலமாக உள்ளவர்கள். அதைத் தவிர அவர்களிடம் உங்களுக்கு வேறு எந்த உரிமையும் இல்லை என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : உம்மு ஸல்மா (ரழி),

நூல்கள் : திர்மிதீ, இப்னுமாஜா.

தவறு செய்யும் மனைவியை வீட்டிலேயன்றி (வெளியிடங்களில் பலரறிய) கண்டிக்கவோ, தண்டிக்கவோ கூடாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : முஆவியத்துல் ஷீரி (ரழி)

நூல்கள் : அபூதாவூத், நஸயீ

அல்லாஹ் கூறுகிறான்:(மனைவிகளாகிய) அவர்களுடன் கனிவோடு நடந்து கொள்ளுங்கள், நீங்கள் அவர்களை வெறுத்த போதிலும் (பொறுமையாக இருப்பீராக! ஏனெனில்) நீங்கள் ஒன்றை வெறுக்கக்கூடும். அதில் அல்லாஹ் ஏராளமான நன்மைகளை வைத்திடலாம். (அல்குர்ஆன் 4:19)

மனைவியின் கடமைகள்

அல்லாஹ் கூறுகிறான்: நல்லொழுக்கமுள்ள மனைவிமார்கள் (தங்கள் கணவனிடம்) விசுவாசமாகவும், பணிந்தும் நடப்பார்கள். (தங்கள் கணவர்) இல்லாத சமயத்தில் அவர்களின் (செல்வம், உடமை, மானம், மரியாதை) அனைத்தையும் பாதுகாப்பவர் களாகவும் இருப்பார்கள். (தங்கள் கணவருக்கு மாறு செய்ய மாட்டார்கள்). (அல்குர்ஆன் 4:34)

"நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே! நீங்கள் ஒவ்வொருவரும் அவரவர் பொறுப்பு குறித்து (மறுமையில் விசாரிக்கப்படுவீர்கள். (ஆட்சித்) தலை வரும் பொறுப்பாளரே! ஆண்மக(னான குடும்பத் தலைவ)னும் தன் மனைவி மக்களின் பொறுப்பாளன் ஆவான். பெண் (மனைவி), தன் கணவனின் வீட்டுக்கும் அவனுடைய குழந்தைகளுக்கும் பொறுப்பாளியாவாள். ஆக, நீங்கள் ஒவ்வொருவரும் பொறுப்பாளரே! நீங்கள் ஒவ்வொருவரும் தத்தமது பொறுப்பு குறித்து விசாரிக்கப்படுவீர்கள்" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி)

நூல் : புகாரி (5200)

ஒரு பெண் தனது ஐவேளைத் தொழுகையை (செம்மையாக) தொழுது (ரமழான்) மாதத்தில் நோன்பு நோற்று, தனது கற்பையும் காத்துக்கொண்டு (இறை ஆணைகளுக்கு மாற்றமில்லாத காரியங்களில்) தன் கணவனுக்குக் கட்டுப்பட்டு நடந்து கொண்டால், நீ விரும்பும் எந்த வாயில் வழியாக வேண்டுமானாலும் சுவர்க்கத்தில் நுழையலாம்' என அவளிடம் (மறுமையில்) கூறப்படும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அப்துர்ரஹ்மான் இப்னு அவ்ஃப் (ரழி)

நூல்கள் : தப்ரானி, முஸ்னத் அஹ்மத்

கணவன் தாம்பத்யத்திற்காக மனைவியை அழைத்து, அவள் தேவையின்றி மறுக்கிறாள். அதனால் கணவன் அவள் மீது கோபங்கொண்டு அவ்விரவைக் கழித்தால், விடியும் வரை அப்பெண்ணை வானவர்கள் சபித்துக்கொண்டே இருப்பார்கள் என நபி (ஸல்) அவர்கள் எச்சரித்தார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)

நூல்கள் : புகாரி, முஸ்லிம், அஹ்மத்

'கணவன் ஊரிலிருக்கும் போது அவனது அனுமதியின்றி எந்தப் பெண்ணும் (ரமழான் அல்லாத நஃபிலான) நோன்பு நோற்பது

கூடாது. மேலும் தனது வீட்டில் கணவன் அனுமதியின்றி எவரையும் அனுமதிக்கக் கூடாது' என்று நபி (ஸல்) அவர்கள் கட்டளை இட்டார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)
நூல்கள் : முஸ்லிம், புகாரி, அபூதாவூத்

ஒரு பெண் தன் கணவனது திருப்தியைப் பெற்ற நிலையில் மரணித்து விட்டால் அவள் சொர்க்கத்தில் நுழைவாள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : உம்மு ஸல்மா (ரழி)
நூல்கள் : திர்மிதீ, இப்னுமாஜா

ஒருவர் மற்றொருவருக்கு சாஷ்டாங்கம் (ஸஜ்தா) செய்யலாமென நான் கட்டளையிட நாடியிருந்தால் மனைவி கணவனுக்கு தலை வணங்கி சாஷ்டாங்கம் (ஸஜ்தா) செய்ய ஆணையிட்டிருப்பேன். (ஆனால் அதுவும் தவறே! எனவே அதனை அனுமதிக்க வில்லை) என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி)
நூல்கள் : அபூதாவூத், நஸயீ, திர்மிதீ

மணமகள் வீட்டு சீதனம்

நபி (ஸல்) அவர்களுக்கு ஜைனப், ருகையா, உம்முகுல்தும், ஃபாத்திமா (ரழி) என்ற நான்கு பெண் மக்களிருந்தனர். இவர்களில் ருகையா அவர்களை உஸ்மான் (ரழி) முதலில் மணமுடித்தார்கள். பத்ருபோரின் போது ருகையா (ரழி) அவர்கள் நோயால் இறந்து விடவே, நபி (ஸல்) அவர்கள் தனது அடுத்த மகளான உம்முகுல்தும் (ரழி) அவர்களை மணமுடித்து வைத்தார்கள். இவ்விரு திருமணங் களிலும் செல்வந்தரான உஸ்மான் (ரழி) அவர்களை மருமகனாகப் பெற்ற நபி (ஸல்) அவர்கள் எந்த சீர்வரிசைகளையும்,

சீதனங்களையும் தனது மகளுடன் மாப்பிள்ளை உஸ்மான் (ரழி) அவர்களின் வீட்டுக்கு அனுப்பியதாக, அதிகாரப்பூர்வமாக செய்திகளைப் பார்க்க முடியவில்லை. என்றாலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு அன்பளிப்பு செய்வதை தடுக்கவும் இல்லை என்பதை அறிய முடிகிறது.

எனவே திருமணத்தின் போது மட்டுமல்லாமல், எந்த சமயத்தில் வேண்டுமானாலும் தனது மகளுக்காக அன்பளிப்புகள் வழங்குவதற்கு மார்க்கத்தில் அனுமதியுள்ளது. ஆனால், அதில் அவர்கள் நீதியைக் கடைபிடிக்க வேண்டும்.

நு..மான் பின் பஷீர் (ரலி) அவர்கள் மிம்பரின் மீது நின்று கொண்டு என் தந்தை அன்பளிப்பு ஒன்றை எனக்குக் கொடுத்தார். என் தாயார் அம்ரா பின்த் ரவாஹா (ரலி) அவர்கள் என் தந்தையிடம், "நீங்கள் இதற்கு அல்லாஹ்வின் தூதரை சாட்சியாக ஆக்காத வரையில் நான் இதை ஒப்புக் கொள்ள மாட்டேன்" என்று கூறினார்கள். அதற்கு என் தந்தை "அல்லாஹ்வின் தூதரே! நான் அம்ரா பின்த் ரவாஹாவின் வாயிலாக எனக்குப் பிறந்த என் மகனுக்கு அன்பளிப்பு ஒன்றைக் கொடுத்தேன். அவள் (என் மனைவி) தங்களை சாட்சியாக ஆக்கும்படி எனக்கு கட்டளை இட்டாள்" என்று கூறினார். அதற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் "உங்கள் மற்ற பிள்ளைகளுக்கும் இதே போன்று கொடுத்துள் ளீர்களா?" என்று கேட்டார்கள். அதற்கு என் தந்தை, "இல்லை" என்று பதிலளித்தார். அப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "அவ்வாறெனில், அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்! உங்கள் பிள்ளைகளிடையே நீதம் செலுத்துங்கள்" என்று கூறினார்கள். இதைக் கேட்ட என் தந்தை, உடனே திரும்பி வந்து, அன்பளிப்பை ரத்து செய்தார்.

அறிவிப்பவர்:ஆமிர் இப்னு ஷர்ஹபீல் (ரழி)

நூல் : புகாரி (2587)

“நீதமாக நடந்து கொள்ளுங்கள்! நீதம் தவறினால் அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள்! பாவத்திற்கு என்னை சாட்சியாளனாக ஆக்கா தீர்கள்” என்ற இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வார்த்தைகள், பெற்றோர்கள் தங்கள் பிள்ளை களுக்கு மத்தியில் வழங்கும் அன்பளிப்புகளில் சரியாக நடக்க வேண்டும் என்பதையே எடுத்துக் காட்டுகின்றன.

ஆனால், நடைமுறையில் பிள்ளைகளுக்கு மத்தியில் பெற்றோர்கள், அன்பளிப்பு விஷயத்தில், மிக அதிகமாகவே பாரபட்சம் காட்டுகின்றனர். பெண் மக்களுக்கு மத்தியிலே மூத்த மகளுக்கு ஒரு விதம், இளைய மகளுக்கு மற்றொரு விதம் என்று அவர்களுக்கு அளிக்கும் நகை, நிலம், சீர் வரிசைகளில் வேறுபாடுகள் காட்டுவது சர்வ சாதாரணமாக நடக்கின்றது.

மேலும் திருமணத்தின் போது நகை போடுவதைக் காரணம் காட்டி; பெண்களுக்குச் சொத்துரிமையை மறுக்கும் நிலையும் உள்ளது. இது போன்ற பாரபட்சம் நடைபெறாமல் ஒரு பெண்ணுக்கு அவர்களது பெற்றோர் அன்பளிப்புச் செய்வதால் தவறில்லை.

மணமக்களுக்காக நமது பிரார்த்தனை (துஆ)

நபி (ஸல்) அவர்கள் மணமக்களுக்காக திருமணத்தில் வாழ்த்தும்போது...

بَارَكَ اللّٰهُ لَكَ وَبَارَكَ عَلَيْكَ وَجَمَعَ بَيْنَكُمَا فِي الْخَيْرِ

பாரகல்லாஹுலக வபாரக அலைக வஜமஅ பைனகுமா பீ கைர்...என துஆச் செய்து வாழ்த்தினார்கள். பொருள்: அல்லாஹ் உங்கள் இருவருக்கும் பரக்கத் செய்வானாக! உங்கள் இருவருக்காக மற்ற பொருள்களிலும் பரக்கத் செய்வானாக! உங்கள் இருவரையும் நல்லவற்றில் ஒன்றிணைப்பானாக! என்று கூறுவார்களென

அபூஹுரைரா (ரழி) அறிவிக்கும் இந்த ஹதீஸ் அஹ்மத், அபூதாவூத், திர்மிதீ, இப்னுமாஜா ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது.

(பரகத்) என்னும் அரபி சொல்லுக்கு புலனுக்கெட்டாத இறை அருள் என்பது பொருள்.

மேற்கண்ட இந்த துஆவை நாம் அனைவரும் மணமக்களுக்காக ஓதுவதுதான் நபிவழி.

அப்துர் ரஹ்மான் இப்னு அவ்.்.ப் (ரழி) அவர்களின் (ஆடையின்) மீது (வாசனை திரவியத்தின்) மஞ்சள் நிற அடையாளத்தைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், "இது என்ன?" என்று கேட்டார்கள். அப்துர் ரஹ்மான் இப்னு அவ்.்.ப் (ரழி) அவர்கள், "ஒரு பேரீச்சங் கொட்டையின் எடையளவு தங்கத்தை (மஹ்ராக)க் கொடுத்து, ஒரு பெண்ணை நான் மணந்து கொண்டேன்" என்று பதிலளித்தார்கள். நபி (ஸல்) அவர்கள், "பாரக்கல்லாஹ் - அல்லாஹ் உங்களுக்கு சுபிட்சத்தை வழங்குவானாக!" என்று பிரார்த்தித்துவிட்டு, "ஓர் ஆட்டையாவது (அறுத்து) வலீமா - மணவிருந்து அளியுங்கள்!" என்று சொன்னார்கள்.

அறிவிப்பாளர் : அனஸ் (ரழி)

நூல் : புகாரி (5155)

இந்த நபிவழிக்கு மாறாக, நாம் வேறுவிதத்தில் வாழ்த்துவது, மேற்கண்ட துஆவை புறக்கணிப்பதுடன் ஒரு நபிவழியை ஒரு சுன்னத்தை புறக்கணித்து விடும் விதமாக, நம்மை ஒரு நூதனத்தை நடைமுறைபடுத்தியவராக்கிவிடும் என்பதை கவனிக்கவும்.

'வார்த்தையில் சிறந்தது அல்லாஹ்வின் வார்த்தை (குர்ஆன்). நடைமுறையில் சிறந்தது என்னுடைய நடைமுறை (சுன்னத்). காரியங்களில் கெட்டது பித்அத்துக்கள். பித்அத்துகள் அனைத்தும் வழிகேடுகளே! வழிகேடுகள் நரகத்தில் (கொண்டு) சேர்க்கும்' என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு மஸ்வூது (ரழி),

நூல் : புகாரி.

ஆதலால் நாம் மேற்படி நபி (ஸல்) கூறிய துஆவை கொண்டே மணமக்களை வாழ்த்த வேண்டும். ஒரு சிலரிடம் மட்டும் நடைமுறையில் உள்ள அல்லி∴ப் பைனஹுமா போன்ற துஆவை ஓதுவது அதற்கு நபி (ஸல்) கூறாத விதத்தில் ஆமீன், ஆமீன் என்று கூறுவதனை தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்த துஆ ஓதும் போது அலி, ∴பாத்திமா என்ற பெயர் வரும்போது பெண்ணுக்கு பெண்ணுடைய உறவினர் (தாலி)கருகமணி கட்டுவது போன்றவை ஆதாரமற்ற மூட நம்பிக்கையாகும். அதை நாம் அவசியம் தவிர்க்க வேண்டும். நபி (ஸல்) அவர்கள் தமது காலத்தில் நிக்காஹ்விலோ, நிக்காஹ்விற்கு பிறகு தன் மனைவிகளுக்கோ (தாலி) கருகமணி கட்டவே இல்லை என்பதும் அல்லது அவர்கள் காலத்தில் நடைபெற்ற திருமணங்களில் மணமகள் கழுத்தில் கருகமணி கட்ட வேண்டும் என ஆணையிட்டதாகவோ எந்த ஆதாரமுமில்லை. (தாலி) கருகமணி கட்டுவது, அதை கணவன் இறந்த பின் அறுப்பது, பின் அந்த பெண்ணை விதவை கோலத்தில் வைத்து அபசகுனமாக கருதி ஒதுக்கி வைப்பது இவையாவும் இஸ்லாத்தில் அங்கீகரிக்கப் படாதவை யாகும். இவை பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமையாகும்.

இந்த மூடபழக்கத்தில் இருந்து தவிர்ந்துக் கொள்ள வேண்டும்.

திருமண அநாச்சாரங்களை விட்டொழிப்போம்

1. மணமக்களை பூமாலை மலர்களால் அலங்கரித்து, உருவத்தை மறைத்து அழைத்து வரல்.

2. திருமணத்திற்கு முந்திய நாளிரவு மண மக்களுக்கு ரசம் (நலங்கிடல்) என்ற பெயரில் எண்ணெய் சடங்கு செய்தல்.

3. கைக்கூலி எனும் வரதட்சணை வாங்குதல்.

4. மாலை மாற்றுதல், வெற்றிலை மாற்றுதல், அரிசி அளத்தல், பல்லாங்குழி விளையாடல் போன்றவை.

5. மணமேடைக்கு மணமகன் வருகையில் ஆரத்தி எடுத்தல், ஆட்டுத்தலை, கோழி போன்றவற்றை தலையை சுற்றி எறிந்து திருஷ்டி கழித்தல்.

6. மணமகனுக்கு பெண் வீட்டார் நிறைகுட தண்ணீர்வைத்து அதில் அவரின் காலை கழுவி விடல்.

7. மணமகனுக்கு தங்க மோதிரம், மைனர் செயின் அணிவித்தல்.

8. மணமகளுக்கு தாலி மற்றும் கருகமணி கட்டுதல்.

9. மணமக்களை வைத்து மஞ்சள் பூசி நலங்கு பாடுதல்.

10. நல்லநேரம், சகுணம் பார்ப்பது, சடங்குகளின் பெயர்களால் வரம்புமீறி, ஆண், பெண் (திரை) ஹிஜாபின்றி இஸ்லாம் அனுமதிக்காத விதத்தில் விளையாடி மகிழ்வது.

11. மேடை அலங்காரம், வீடியோ, மேளவாத்தியம் என்று அனாச்சாரமாக பணத்தை செலவழிப்பது.

12. பெண் வீட்டாரிடம் திருமணத்திற்குப்பின் பல சந்தர்ப்பங்களில் சீர்வரிசை என்ற பெயரில் பொருட்களை கேட்டு வாங்குவது.

13. சுன்னத்தான தாடியை முகச்சவரம் என்ற பெயரில் மழித்தல்.

14. ஆடி, ஸபர் மாதங்களில் திருமணம் செய்யக்கூடாது என நினைத்தல்.

15. மணமகனை பைத் பாடி ஊர்வலமாக அழைத்து செல்வது.

16. திருமணம் முடிந்தபின் மணமக்களை அருகில் உள்ள தர்ஹாக்களுக்கு அழைத்து செல்வது.

மேலே குறிப்பிட்ட அனைத்து சம்பிரதாயங் களுக்கும் இஸ்லாத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

'எவர்கள் பிற சமுதாயத்தின் கலாச்சாரத்தை பின்பற்று

கிறார்களோ, அவர்கள் அந்த சமுதாயத்தைச் சேர்ந்தவராவார்கள். என்னைச் சார்ந்தவர்களல்ல' என்று நபி (ஸல்) அவர்கள் எச்சரித்துள்ளார்கள்.

அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரழி)

நூல்கள் : அபூதாவூத், திர்மிதீ, அஹ்மத்.

இங்கு நபி முஹம்மது (ஸல்) அவர்கள் பிற சமுதாய கலாச்சாரத்தை பின்பற்றாதீர்கள் என்று கூறுவது எந்த ஒரு சமுதாயத்தின் மீது உள்ள குரோதத்தினாலோ, வெறுப்பினாலோ அல்ல. அப்படி செய்வது மனித யூகங்கள் கலந்த, இறைவனின் முழு அங்கீகாரம் அல்லாத ஒரு கலாச்சார செயலாக இருக்குமே அல்லாமல், இறைவனால் அளிக்கப்பட்ட எளிமையான, சீரான, ஒழுக்கமான ஒரு மார்க்கத்தின் கலாச்சாரமாக இருக்காது. மேலும் இறை வெறுப்பும், தண்டனையும் பெற வைக்கும் காரியமாகிவிடும்.

மணமக்களின் பிரார்த்தனை (துஆ)

لَئِنْ آتَيْتَنَا صَالِحًا لَّنَكُونَنَّ مِنَ الشَّاكِرِينَ

'லயின் அதய்தனா ஸாலிஹன் லநகூனன்ன மினஷ் ஷாகிரீன்' (7:189)

எங்களிறைவா! எங்களிருவருக்கும் நீ நல்லதை (சந்ததியை) கொடுத்தால் நிச்சயமாக நாங்களிருவரும் நன்றியுடையவர்களாக இருப்போம். (அல்குர்ஆன் 7:189)

(இது ஆதிமனிதர் ஆதம் (அலை) அவர்களும் துணைவியார் ஹவ்வா (அலை) அவர்களும் கேட்ட பிரார்த்தனையாகும்)

رَبِّ هَبْ لِي مِن لَّدُنكَ ذُرِّيَّةً
طَيِّبَةً ۖ إِنَّكَ سَمِيعُ الدُّعَاءِ

ரப்பீஹப்லி மின்லதுன்க துர்ரிய்யதன் தைய்யிபதன் இன்னக்க சமிஉத்துஆ

இறைவனே! உன்னிடமிருந்து எனக்காக ஒரு பரிசுத்தமான சந்ததியைக் கொடுத்தருள்வாயாக! நிச்சயமாக நீ பிரார்த்தனை களைச் செவிமடுப்பவன். (அல்குர்ஆன் 3:38)

(இது ஜக்கரிய்யா (அலை) அவர்கள் கேட்ட பிரார்த்தனையாகும்)

மணமகனின் பிரார்த்தனை (துஆ)

رَبَّنَا هَبْ لَنَا مِنْ أَزْوَاجِنَا وَذُرِّيَّاتِنَا
قُرَّةَ أَعْيُنٍ وَاجْعَلْنَا لِلْمُتَّقِينَ إِمَامًا

'ரப்பனா ஹப்லனா மின் அஜ்வாஜினா வ துர்ரிய்யாதினா குர்ரத்த அ.'.யுனின் வ ஜ்அல்னா லில் முத்தகீன இமாமா

'எங்கள் இறைவனே! எங்கள் மனைவியரிடமும், எங்கள் சந்ததியரிடமும் இருந்து எங்களுக்கு கண்களின் குளிர்ச்சியைத் தருவாயாக! இன்னும் இறையுணர்வுடையோர்க்கு எங்களை இமாமாக (வழிகாட்டியாக) ஆக்கி அருள்வாயாக.

(அல்குர்ஆன் 25:74)

(இது நல்லடியார்கள் கேட்கும் பிரார்த்தனைகளில் ஒன்று.)

ஒரு பெண்ணை மணமுடித்ததும் அவளது முன்னெற்றி ரோமத்தை பிடித்துக் கொண்டு மணமகன்:

اَللّٰهُمَّ إِنِّي أَسْأَلُكَ خَيْرَهَا وَخَيْرَ مَا جَبَلْتَهَا عَلَيْهِ وَأَعُوذُ بِكَ مِنْ شَرِّهَا
وَمِنْ شَرِّ مَا جَبَلْتَهَا عَلَيْهِ .

‘அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக கைரஹா வகைர மா ஜபல்த்த அலைஹி வ அவூது பிக மின் ஷர்ரிஹா வஷர்ரி மாஜபல்த்த அலைஹி’ என்று பரகத்துக்காக துஆ செய்ய வேண்டும்.

பொருள்: இறைவா! இப்பெண்ணிடமிருந்து (எனக்கு) நன்மையானவை கிடைக்க வேண்டு மென்றும் இப்பெண்ணின் இயல்புகளிலிருந்து எனக்கு நன்மையானவை கிடைக்க வேண்டுமென்றும், உன்னிடம் வேண்டுகிறேன். மேலும் இப்பெண்ணிட மிருந்து தீங்குகள் ஏற்படாமலிருக்கவும் உன்னிடம் வேண்டுகிறேன்.

அறிவிப்பாளர்: அப்துல்லாஹ் இப்னு அமர்பின் ஆஸ் (ரழி)

நூல் : ஹாகிம்

இல்லறத்தின் ஒழுங்குகள்

ஒருவர்தம் மனைவியுடன் கூடும்போது,

بِسْمِ اللهِ اَللّٰهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وَجَنِّبْ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا

‘பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம ஜன்னிப்னஷ் ஷைதான வஜன்னிபிஷ்ஷைதான மா ரஸக்தனா’ என்று கூறுவாரானால் - அப்போது அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு ஷைத்தானால் எந்த தீங்கும் ஏற்படாது என்று நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

பொருள்: இறைவா! எங்களையும் எங்களுக்கு நீ வழங்கக்கூடிய குழந்தைகளையும் ஷைத்தானை விட்டும் நீ பாதுகாப்பாயாக!

நூல்கள் : புகாரி, முஸ்லிம்

நபி (ஸல்) அவர்கள் குளிப்பு கடமையான நிலையில் உண்ணவோ, உறங்கவோ விரும்பினால், தொழுகைக்குச் செய்வதுபோல் ஒளு செய்து கொள்வார்கள் என்று ஆயிஷா (ரழி) அறிவிக்கிறார்கள். (நூல்கள் : புகாரி, முஸ்லிம்)

தன் மனைவியுடன் கூடிவிட்டு அவளது அந்தரங் கத்தை வெளியில் சொல்லித் திரிபவன் கியாமத் நாளில் அல்லாஹ்விடம் மிகவும் கெட்டவனாவான் என நபி (ஸல்) எச்சரித்துள்ளார்கள்.

அறிவிப்பாளர் : அபூஸயீத் (ரழி),

நூல்கள் : முஸ்லிம், அஹ்மத்

...அவன் உங்களுக்காக உங்கள் இனத்தில் இருந்தே மனைவியைப் படைத்தான். நீங்கள் அவர்களிடம் அமைதி பெற வேண்டும் என்பதற்காக! (அல்குர்ஆன் - 30:21)

ஆக ஒரு மனிதனின் அமைதி திருமணத்தின் மூலம் ஏற்படுகிறது என அல்லாஹ் சுட்டிக் காட்டு கிறான். இந்த அடிப்படையில் இளம் தம்பதியினர் தமது இல்லறத்தை மகிழ்ச்சியுடன் அமைத்துக் கொள்ள வேண்டும். இல்லறத்தில் ஈடுபடுவதற்கு என ஏராளமான கட்டுக்கதைகளை சிலர் உண்டாக்கியதை முஸ்லிம்கள் நம்பி வருகின்றனர்.

- தாம்பத்தியத்தில் ஈடுபடும்போது பேசக்கூடாது.

- திங்கள் மாலை - செவ்வாய் கிழமைகளில் கூடக்கூடாது.

- புதன் இரவு கூடினால் ஆறு விரலுடன் குழந்தை பிறக்கும்.

- ரமலான் பிறை 27-ல் கூடக்கூடாது. மீறினால் குழந்தை கோபக்காரனாக பிறப்பான்.

இப்படி கட்டுக்கதைகள் ஏராளம். இதற்கும் இஸ்லாத்திற்கும் சம்பந்தம் இல்லை.

- மாதவிடாய் காலத்தில் உறவுக் கொள்ளத் தடை.

- மனைவியின் மலப்பாதையில் உறவு கூடாது.

- இஃதிகாஃப் இருக்கும்போது

- இஹ்ராம் அணிந்த நிலையில் உறவு கொள்ள கூடாது.

இது தவிர மற்ற நேரங்களில் (நோன்பு காலத்தில் இரவு நேரங்கள் உட்பட) தம்பதியினர் கூடலாம்.

(மேலும் விபரங்களுக்கு 'இஸ்லாத்தில் உடலுறவுச் சட்டங்கள்' என்ற நூலை வாங்கி படிக்கவும்)

உங்கள் மனைவியர் உங்களுடைய விளை நிலங்களாவர். எனவே நீங்கள் விரும்பும் முறையில் அவர்களிடம் செல்லுங்கள்.

(அல்குர்ஆன் - 2 : 223)

என்ற இறை வசனப்படி கணவன்- மனைவி விரும்பியவாறு தமது இல்லறத்தை அமைத்துக் கொள்ளலாம். குர்ஆனும் - நபிமொழியும் கூறியபடி தமது இல்லற வாழ்க்கையை அமைத்து ஈருலகிலும் வெற்றி பெறுவோமாக!

– அல்லாஹ் நமக்கு போதுமானவன்! –